**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006**

**இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் சிறப்பு துணைப் பொதுத் தேர்வு,**

**ஜுன்/ஜுலை 2018**

**மறுகூட்டல் முடிவுகள் வெளியிடுதல் குறித்த செய்திக் குறிப்பு**

நடைபெற்ற ஜுன்/ஜுலை 2018, பத்தாம் வகுப்பு சிறப்புத் துணைப் பொதுத் தேர்வு எழுதிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கை **44,058** ஆகும். மறுகூட்டலுக்கு விண்ணப்பித்த தேர்வர்களின் எண்ணிக்கை **561** ஆகும். மறுகூட்டல் செய்யப்பட்ட விடைத்தாட்களின் எண்ணிக்கை **1,179** ஆகும். இதில் மதிப்பெண் மறுகூட்டலில் மாற்றம் உள்ள தேர்வர்களின் எண்ணிக்கை **10** ஆகும்.

மதிப்பெண் மாற்றம் உள்ள தேர்வர்களது பதிவெண்கள் பட்டியல் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் **23.08.2018 (வியாழக் கிழமை) பிற்பகல்** வெளியிடப்படும். மதிப்பெண் மறுகூட்டலுக்கு விண்ணப்பித்து இப்பட்டியலில் இடம்பெறாத பதிவெண்களுக்கான விடைத்தாட்களில் **மதிப்பெண்களில் எவ்வித மாற்றமும் இல்லை** என அறிவிக்கப்படுகிறது.

மேற்படி தேர்வர்களுக்கு மாற்றம் செய்யப்பட்ட மதிப்பெண்களைப் பதிந்த தற்காலிக மதிப்பெண் சான்றிதழை **23.08.2018** பிற்பகல் முதல் **www.dge.tn.nic.in** என்ற இணையதளத்தில் தேர்வர்கள் ஜுன் 2018 சிறப்புத் துணைப் பொதுத் தேர்விற்கான பதிவெண் மற்றும் பிறந்த தேதியினைப் பதிவு செய்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**தேதி: 21.08.2018**
**இடம்: சென்னை – 600 006**